வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 05.09.2024 வியாழக்கிழமை | இதழ் : 249 | பக்கங்கள் : 12

# தமிழ் அரசு, த.வி.கூட்டணியினர் அரியநேத்திரனுக்காக பிரசாரம்!

## மட்டக்களப்பில் நேற்று மேடையேறினர்

- லியோன் அன்ரன் -

மட்டக்களப்பு, செப்ரெம்பர் 05

**இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஞா.சிறீநேசன், தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் அருண் தம்பிமுத்து ஆகியோர் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக நேற்றுப் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.**

தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் பிரசாரக் கூட்டம் வாகரை - தட்டுமுனை கிராமத்தில் நேற்று நடைபெற்றது. இதில் சிறீநேசன், அருண் தம்பிமுத்து ஆகியோர் பங்கேற்று தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்துப் பேசியிருந்தனர்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பது என்றும் அரியநேத்திரன் போட்டியிலிருந்து விலக வேண்டும் என்றும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்தது. இந்த நிலையில், அந்தக் கட்சியின்

11

## நாடு முழுவதும் நேற்று தபால் மூல வாக்களிப்பு

### இன்றும் நாளையும் நடக்கும்

கொழும்பு, செப். 05

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பின் முதலாம் நாள் நேற்று நிறைவடைந்தது.

காலை 9 மணிக்கு ஆரம்பமான அஞ்சல் மூல வாக்களிப்பு மாலை 4 மணியுடன் நிறைவடைந்துள்ளது.

மாவட்ட செயலகங்கள், தேர்தல் பணிமனைகள், பொலிஸ் திணைக்களங்கள் மற்றும் அது சார் பணிமனைகளில் தபால் மூல வாக்களிப்பு

11

## தமிழரின் ஜனநாயக போராட்ட வழியே தமிழ் பொது வேட்பாளர்!

### சிறீநேசன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப். 05



அகிம்சை போராட்டம், ஆயுதப் போரட்டம் என் பன தோல்வியைத் தந்ததால்தான், பொது வேட்பாளர் என்ற ஜனநாயக போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம் - என்று தெரிவித்துள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின்

11

## அரச ஊழியர்களை தவறாக வழிநடத்த முயல்கிறது அரசு!

### பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 05

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு என்ற அறிவிப்பின் மூலம் அரசாங்கம் பொதுமக்களை தவறாக வழிநடத்த முயல்கின்றது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் தபால்மூல வாக்களிப்புக்கு முன்னதாக அரசாங்கம் பொதுமக்களை தவறாக வழிநடத்த முயல்கின்றது என பவ்ரல் கூறியுள்ளது.

அமைச்சரவை எதிர்வரும் தேர்தலில் பாதிப்பை ஏற் படுத்தக்கூடிய மூன்று தீர்மானங்களை எடுத்துள்ளது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்

11

## பொதுவேட்பாளர் விவகாரம் பாடமாக அமைய வேண்டும்!

### மன்னாரில் அரியநேத்திரன் தெரிவிப்பு

மன்னார், செப். 05

நாட்டின் 9ஆவது ஜனாதிபதியாக வருகிறவருக்கு பாடமாக அமைய வேண்டும் என்பதற்காகவே தமிழ்ப் பொது வேட்பாளராக இந்தத் தேர்தலில் நான் போட்டியிடுகிறேன் என்று பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று ரெலோ பணிமனையில் நடந்த மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளி யிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11

### தங்கம், போதைப்பொருள் கடத்தல்:

## கிளி., யாழ். வாசிகள் மூவர் பெங்களூரில் கைதாகினர்!

பெங்களூர், செப். 05

யாழ்ப்பாணம், கிளிநொச்சியை சேர்ந்த மூவர் இந்தியாவின் பெங்களூர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களிடம் இருந்து 12 கோடி ரூபாய்க்கும் அதிகமான தங்கக் கட்டிகளும் போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன என்று பெங்களூர் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் மூவரும் நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக பெங்களூர் விமான நிலை யத்தை சென்றடைந்தபோதே சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

11


## சைவ தமிழர் 'சங்கு'க்கு வாக்களிக்க வேண்டும்!

### மறவன்புலவு சச்சிதானந்தன்

யாழ்ப்பாணம், செப். 05

"ஒவ்வொரு சைவத் தமிழரும் வாக்களிக்க வேண்டும். அதை சங்கு சின்னத்துக்கு மட்டுமே அளிக்க வேண்டும். இரண்டாவது, மூன்றாவது விருப்பு வாக்கை எவருக்கும் அளிக்க வேண்டவே வேண்டாம்", - இவ்வாறு ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், "சைவத் தமிழ்த் தேசியம் மீள் எழ வெற்றி பெறத் தொடக்கத்திலேயே (22.07.2024) எடுத்த முடிவு இதுவே வழிகாட்டல் - இதுவே ஆணை", என்றும் நேற்று அவர் ஊடகங்களுக்கு அனுப்பிய குறிப்பில் தெரிவித்துள்ளார். (ஐ)



பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானபோது....

## படகு கவிழ்ந்து விபத்து இளம் மீனவர் மாயம்!

### ஒருவர் காப்பாற்றப்பட்டார் மாதகல் கடற்பரப்பில் துயரம்

யாழ்ப்பாணம், செப். 05

இரு இளம் மீனவர்கள் தொழிலுக்கு சென்ற படகு விபத்துக்குள்ளாகி கவிழ்ந்ததில் ஒருவர் காப்பாற்றப்பட்டார். மற்றொருவர் காணாமல் போயுள்ளார்.

மாதகல் கடற்பரப்பில் நேற்று புதன்கிழமை அதி காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த நாகராசா

11

## சஜித்தின் வவுனியா கூட்டத்தில் இன பாரபட்சம் என குற்றச்சாட்டு!

வவுனியா, செப். 05

வவுனியாவில் நேற்று முன்தினம் நடந்த சஜித் பிரேமதாஸவின் பிரசார கூட்டத்தில் இன சார்பிலான பார பட்சத்துக்கு உள்ளாகினர் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் ஏற்பாட்டில் பங்கேற்றவர்களுக்கு தண்ணீர் போத்தல் வழங்கப்படவில்லை. அழைத்துவரும்போது தண்ணீர்

11

## என் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் ஜனாதிபதி ரணிலே பொறுப்பு!

### முஜிபுர் எம். பி. சபையில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 05

எனது அரசியல் நடவடிக்கையை பொறுத்துக் கொள்ள முடியாமல் என்னை சிறையில் அடைக்க அல்லது எனது உயிருக்கு பாதிப்பை ஏற்படுத்த சதித்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. எனது உயிருக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் ரணில்

11

உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நடைமுறைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் அமைச்சரவை தீர்மானங்கள்

கொழும்பு, செப். 05

தேர்தல் நடைமுறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் எடுக்கப்படும் அமைச்சரவை தீர்மானங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான தேர்தல் நடைமுறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த அமைச்சரவை தீர்மானம் குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தேர்தல் நடைமுறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றனவா என்பதை கண்டுபிடிப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு உள்ளது. முறைப்பாடு இல்லாவிட்டாலும் நாங்கள் இந்த நடவடிக்கையை எடுக்கலாம் என அவர் தெரிவித்தார். (அ)

# மகா கும்பாபிஷேகம்

வடமராட்சி, செப். 05

பருத்தித்துறை மாதனை கற்பகப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.49 மணி முதல் 8.23 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கர்மாரம்பம் 31ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமானது. பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெறும்.

ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியார் சிவசிறீ தம்பர கிருஷ்ணமூர்த்தி பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். நல்லை ஆதீன குருமுதல்வர் சிறிலசிறீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் அருளுரை வழங்குவார். (ஐ- 02)

# ரணிலின் புதிய கூட்டணி இன்று கொழும்பில் உதயம்

கொழும்பு, செப். 05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்துள்ள கட்சிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து பிரமாண்ட கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுவந்த நிலையில், இதன் அங்குரார்ப்பண நிகழ்வை இன்று வியாழக்கிழமை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

கொழும்பு பத்தரமுல்லை வோட்டர்ஸ் எஜ் ஹோட்டலில் இந்த நிகழ்வு இடம்பெற உள்ளது. இன்று காலை ரணிலை ஆதரிக்கும் அனைத்து எம்.பிகளும் இந்த நிகழ்வில் பங்குபற்றி உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு ரணில் விக்கிரமசிங்கவின் தரப்பால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டணியின் தலைவர், செயலாளர் மற்றும் ஏனைய பதவிகள் குறித்த அறிவிப்புகளும் இதன்போது வெளியிடப்பட உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயக முன்னணி உட்பட பல்வேறு கட்சிகள் இந்த கூட்டணி உடன்படிக்கையில் கைச்சாத்திட உள்ளன.

மேற்படி கூட்டணியின் கீழ் ரணிலை ஆதரிக்கும் எம்.பிகள் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவும் உத்தேசித்துள்ளனர். (அ)

# அநுரகுமார திஸநாயக்கவுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறைப்பாடு!

கொழும்பு, செப். 05

ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி கட்சி தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் அதற்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழு சரியாக செயற்படத் தவறியமை தொடர்பில் இலங்கை சீர்திருத்த அமைப்பின் சட்டப் பிரதிநிதி தனுக ரணஞ்சக கஹந்தகமகே ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விசேட முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள்ள அவர், தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்ட போதிலும் தேர்தல்கள் ஆணைக்குழு இதுவரை உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சியானது தேர்தல் சட்டங்களை மீறுவதாக பல சந்தர்ப்பங்களில் அவதானித்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதி மஹரகம இளைஞர் நிலையத்தில் நடைபெற்ற அரசியல் கூட்டத்திற்கு அரச தாதியர்களை சீருடையில் அழைத்து வந்தமை தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும் என ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விடுத்துள்ள முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது தொடர்பான முறைப்பாடு தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு கடந்த ஜூலை மாதம் 29ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த தேர்தல் சட்டங்கள் மற்றும் அரசியல் நெறிமுறைகளை மீறுவது குறித்து தேர்தல் ஆணைக்குழுவால் எந்த முக்கிய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்றும் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. (அ)

# கிளிநொச்சியில் இலஞ்சம் பெற முயன்ற இரண்டு பொலிஸார் பணி இடைநிறுத்தம்!

கிளிநொச்சி, செப். 05

கிளிநொச்சியில் பொது மகனிடம் இலஞ்சம் வாங்க முற்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி விவேகானந்தா நகர் பகுதியைச் சேர்ந்த நபர் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணை மேற்கொண்ட கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் இவ்வாறு இருவரையும் பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார்.

குறித்த பொதுமகனிடமிருந்து 5,000 ரூபா பணம் பெற இருவரும் முயற்சித்துள்ளனர். இது தொடர்பாக விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும், குறித்த இருவரையும் நேற்று முன் தினம் முதல் பணியிலிருந்து இடைநிறுத்து மாறும் பொலிஸ் அத்தியட்சகர் உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இருவரும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தல் பிரசாரத்தில் 100 அரச அதிகாரிகள்

## தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 05

விமான நிலைய பாதுகாப்புப் பிரிவின் 100 அதிகாரிகள் சட்டவிரோத தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கண்காணிப்பு மையத்தின் பேச்சாளரும் சட்டத்தரணியுமான அகலங்க உக்வத்த கேவால் கையொப்பமிடப்பட்டு வெளியான ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் விமான நிலைய பாதுகாப்புப் பிரிவிற்கு புதிய நியமனங்களாக சேர்த்துக் கொள்ளப்பட்ட சுமார் 100 அதிகாரிகளுக்கு கடந்த நாட்களில் 72 இலட்சம் ரூபா செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.


அந்த பயிற்சியின் பின்னர் இவர்கள் அனைவரும் கட்டுநாயக்கவுக்கு அழைத்து வரப்பட்டு விடுப்பு விண்ணப்பத்தில் கையொப்பமிட்டு, சுயாதீன வேட்பாளராக போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரத்திற்காக பேருந்தில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கண்காணிப்பு நிலையம் முறைப்பாடு செய்துள்ளது.

சுயாதீன ஜனாதிபதி வேட்பாளர் ரணில் தனது ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக பொது வளங்களையும் அரச அதிகாரிகளையும் பயன்படுத்தும் போக்கு அதிகரித்து வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட உரிய அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு இதனை கட்டுப்படுத்தி சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)


வெல்க தமிழ்

சங்கு எங்கள் சின்னம்

எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
கட்சிகளைக் கடந்து
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!





எங்களிடம்
இருக்கும்
ஜனநாயக ஆயுதம்
வாக்குகள்தான்.
இம்முறையாவது
இலக்குத் தவறாது
பிரயோகிப்போம்.

தமிழ்ப் பொது வேட்பாளர்

பா.அரியநேத்திரன்

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
05.09.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சிறீதரன் என்ன செய்யப் போகின்றார்?

இலங்கை தமிழ் அரசுக் கட்சியானது ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை அறிவித்துவிட்டது. அந்த அறிவிப்பை தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சிவஞானம் சிறீதரன் கூறுகின்றார். ஆரம்பத்திலிருந்தே, சிறீதரன் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்து வருகின்றார். சுமந்திரன் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வருகின்றார். சுமந்திரனின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக தற்போது மத்திய குழுவில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுவிட்டது. சுமந்திரன் கூறியது போன்றே தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவில்லை என்னும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

முதல் நகர்வில், சுமந்திரன் வெற்றிபெற்றுவிட்டார். இதே போன்று, முதல் நகர்வில் சிறீதரனின் நகர்வு சறுக்கிவிட்டது. அதாவது, கட்சியைத் தன் வழிக்குக் கொண்டுவருவதில் சிறீதரனால் வெற்றிபெற முடியவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில், சிறீதரனின் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமையப் போகின்றன? சுமந்திரனால் திணிக்கப்பட்ட கட்சித் தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டு தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கைவிடப் போகின்றாரா? அல்லது தனது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாக இருக்கப் போகின்றாரா?

தமிழ்ப் பொது வேட்பாளருக்கான தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு தமிழ்த் தேசிய தேர்தல் விஞ்ஞாபனமாகவே அது வெளியிடப்பட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் அரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆதரிக்கும் முடிவை அறிவித்திருக்கின்றது. இது அடிப்படையிலேயே, தமிழ் அரசுக் கட்சியின் கொள்கை நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறானது. அத்துடன், அதன் அரசியல் வரலாற்றுக்கும் எதிரானது. இதனை சிறீதரன் ஆதரிக்கப் போகின்றாரா?

சிறீதரனுக்கு இரண்டு சவால்கள் உள்ளன. ஒருவேளை அவர் கட்சியின் தீர்மானத்தோடு இணைந்து செல்ல முயற்சித்தால், தமிழ்த் தேசிய நிலைப்பாட்டிலிருந்து சிறீதரன் விலகிச் செல்வதாகவே நோக்கப்படும். தொடர்ந்தும் அவர் தமிழ்த் தேசிய அரசியலில் ஓர் அடையாளமாக இருக்க முடியாது போகும். ஏனெனில், அவர் சுமந்திரனின் நிலைப்பாடோடு ஒத்துப்போகின்றார். அத்தோடு இன்னொரு சவாலையும் அவர் எதிர்கொள்ள நேரிடும். அதாவது, கிளிநொச்சியைப் பொறுத்தவரையில் சிறீதரனுக்கு எதிர்நிலையில் இருக்கும் அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களும் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை எடுத்து பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்தப் பின்புலத்தில், சிறீதரனால் எவ்வாறு சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க முடியும்?

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் சிறீதரன் தொடர்ந்தும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக பேசுவதற்கு அப்பால் பிரசாரங்களில் - குறிப்பாக மேடைகளில் பேச வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம்தான், சிறீதரன் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றார் என்பதை நிரூபிக்க முடியும்.

தமிழ் அரசுக் கட்சியின் பிரேமதாஸ ஆதரவு நிலைப்பாடானது அடிப்படையிலேயே தவறானது. அரசியல் ரீதியில், தமிழ் அரசுக் கட்சியை கொள்கை நிலையில் சிதைக்கக்கூடியது. இவ்வாறானதொரு நிலைப்பாட்டுடன் சிறீதரன் ஒருபோதும் ஒத்துப்போக முடியாது - ஒத்துப்போகவும்கூடாது.

தமிழ் அரசுக் கட்சியின் பிரேமதாஸ ஆதரவு நிலைப்பாடானது. சிறீதரனின் அரசியலை நிறுத்துப் பார்க்கும் ஒரு சோதனை முயற்சியாகவே மாறியிருக்கின்றது. இந்தப் பரீட்சையில் சிறீதரன் வெல்லப் போகின்றாரா அல்லது தோற்கப்போகின்றாரா? முடிவு அவரின் தீர்மானத்தில்தான் தங்கியிருக்கின்றது.

# முல்லைத்தீவில் கைத்தொழில் அபிவிருத்தி குறித்து ஆராய்வு

முல்லைத்தீவு, செப். 05

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஒன்றிணைத்து, மாவட்ட தொழிற்துறை மன்றங்களை உருவாக்குதல் தொடர்பான கலந்துரையாடல், முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

மாவட்ட மட்டத்தில் தொழிற்துறை மன்றத்தை உருவாக்கி, அதனூடாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஒன்றிணைத்து, அவர்களின் உற்பத்தியை மேம்படுத்தல், புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய தொழில் துறையை வளர்த்தல் மற்றும் விற்பனையை பெருக்குதல், சந்தைப்படுத்தலை தூண்டுதல், தொழில் முறைசார் பயிற்சி வழங்குதல், தொழில் வாய்ப்பை ஏற்படுத்தல் முதலான விடயங்களை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்கள பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம், வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்கள உதவிச் செயலாளர் துசியா, காணிப்பகுதிக்கான மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜெயகாந்தன், பிரதேச செயலாளர்கள், மாவட்ட சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், தொழிற்துறையோடு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (அ)

எல்லை தாண்டி மீன்பிடி

# 12 இந்திய மீனவர்களுக்கு ரூ. 20 மில்லியன் அபராதம்!

கொழும்பு, செப். 05

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி கற்பிட்டி வடக்கு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 22 இந்திய மீனவர்களில் 12 பேருக்கு தலா இருபது மில்லியன் ரூபா வீதம் அபராத தொகையை செலுத்துமாறும், தவறும் பட்சத்தில் 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் என புத்தளம் மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரண்டு படகுகளில் தமிழகம் - தூத்துக்குடியில் இருந்து வந்த 22 மீனவர்களில் 12 மீனவர்களுக்கே இவ்வாறு தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், ஏனைய 10 மீனவர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் புத்தளம் மாவட்ட மேலதிக நீதிவான் டி.எல்.ஏ.என். விமலரத்ன உத்தரவிட்டார்.

குறித்த இந்திய மீனவர்கள் 22 பேரும் எல்லை தாண்டி புத்தளம் - கற்பிட்டி வடக்கு கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கடந்த ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இரவு கடற்படையிரால் கைது செய்யப்பட்டனர்.

மேலும், குறித்த இந்திய மீனவர்கள் பயணித்த இரண்டு விசைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 22 மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சட்டவிரோதமாக இலங்கை எல்லைக்குள் நுழைந்தமை தொடர்பில் இந்த 22 இந்திய மீனவர்களுக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இதன்போது சந்தேக நபர்களான இந்திய மீனவர்கள் 22 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட மேலதிக நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், சந்தேக நபர்கள் மீண்டும் நேற்று முன் தினம் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தப்பட்டனர்.

இதன்போது, சந்தேக நபர்களான 22 இந்திய மீனவர்களில் 12 பேர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணமாக, குறித்த 12 மீனவர்களுக்கும் தலா 20 மில்லியன் ரூபா வீதம் அபராத தொகையைச் செலுத்துமாறும், அபராத தொகையைச் செலுத்த தவறும் பட்சத்தில் 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த வருடம் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் இலங்கையில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 44 இந்திய மீன்பிடி படகுகளை கைப்பற்றியுள்ளதுடன், 322 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேஷம்**
வாகன வசதி பெருகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உறவினர், உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**ரிஷபம்**
சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
பயணங்களால் பயனடைவீர்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
விருந்தினர் வருகை அதிகரிக்கும். சொத்துப் பிரச்னைக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். புது அத்தியாயம் தொடங்கும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். கணுக்கால் வலிக்கும். வளைந்து கொடுத்து செல்ல வேண்டிய நாள்.

**துலாம்**
வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். சபைகளில் மரியாதை கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். மதிப்பு மரியாதை கூடும்.

**தனுசு**
பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**மகரம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். புது அதிகாரி உங்களை மதிப்பார். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும்.

**மீனம்**
ஆடை, ஆபரணம் சேரும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். தாயாரின் உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். வேலைகளை உடனடியாக முடிப்பீர்கள்.

# விஜய் கட்சியின் முதல் மாநாட்டில் முக்கிய தலைவர்கள் பங்கேற்பர்?

சென்னை, செப். 05

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாட்டில் தேசிய அளவிலான முக்கிய தலைவர்கள், மாநிலங்களின் முதல்வர்கள் எனப் பலர் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு தொடர்பாக சட்ட நிபுணர்கள், கட்சியின் முக்கிய நிர்வாகிகளுடன் அந்தக் கட்சியின் தலைவர் விஜய் ஆலோசனை நடத்தியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியைத் தொடங்கிய நடிகர் விஜய், 2026ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலை இலக்காக வைத்து தீவிரமாக பணியாற்றி வருகிறார். இதன் தொடர்ச்சியாக விக்கிரவாண்டியில் வரும் 23ஆம் திகதி மாநாடு நடைபெறவுள்ளது. இதற்காக தெரிவு செய்யப்பட்ட இடத்தில் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்து பொலிஸ் தரப்பில் 21 கேள்விகளுக்கு விடையளிக்குமாறு கட்சி நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கட்சியின் பொதுச்செயலாளர் என். ஆனந்த் மற்றும் முக்கிய நிர்வாகிகள் கேள்விக்கான பதிலைத் தயாரித்துள்ளனர். இந்தப் பதில்கள் அடங்கிய பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் பொருட்டு கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோருடன் சென்னை, பனையூரில் உள்ள கட்சித் தலைமையகத்தில் விஜய் ஆலோசனை நடத்தியிருக்கிறார். அப்போது, அவர் பல்வேறு விடயங்கள் தொடர்பாக சட்டநிபுணர்களுடனும் கலந்தாலோசித்து பதில்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இதன்படி, ஒப்புதல் அளிக்கப்பட்ட பதில்கள் இன்றைய தினம் விழுப்புரம் பொலிஸ் தலைமையத்துக்கு வழங்கப்படவுள்ளது. இதனிடையே, விக்கிரவாண்டி மாநாட்டில் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்பார் என்று தகவல்கள் வெளியாகின. இதனை தமிழக வெற்றிக்கழகம் மறுத்துள்ளது. எனினும், இந்த மாநாட்டில் தேசிய அளவிலான முக்கிய தலைவர்கள், மாநில முதல்வர்கள் உள்ளிட்டோர் பங்கேற்க வாய்ப்புள்ளது என்றும் இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# முல்லைப் பெரியாறு அணை: தமிழகத்துக்கு பெரும் அநீதி!

## ராமதாஸ் அறிக்கை

சென்னை, செப். 05

முல்லைப் பெரியாறு அணையை வலுப்படுத்தி, அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த வேண்டும் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பு இன்னும் செயல்படுத்தப்படாத நிலையில், பாதுகாப்பு ஆய்வு நடத்துவது தமிழகத்துக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும் என்று பா. ம. க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

முல்லைப் பெரியாறு அணையை எப்படியாவது மூடிவிட வேண்டும் என்று கேரளம் துடித்துக் கொண்டிருக்கும் நிலையில், அந்த மாநில அரசின் கோரிக்கையை ஏற்று அணையின் பாதுகாப்பு பற்றி ஆய்வு நடத்த உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்புக்குழு ஆணையிட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணையை வலுப்படுத்தி, அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த வேண்டும் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பு இன்னும் செயல்படுத்தப்படாத நிலையில், பாதுகாப்பு ஆய்வு நடத்துவது தமிழகத்துக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும்.

முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்த ஆய்வை ஓராண்டுக்குள் முடிக்க வேண்டும் என்று கண்காணிப்புக் குழு ஆணையிட்டிருந்தாலும், அது முடிவடைய இரு ஆண்டுகள் ஆகலாம். அதுவரை பேபி அணையை வலுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள முடியாது.

எனவே, தமிழக அரசு உடனடியாக உச்சநீதிமன்றத்தை அணுகி, கண்காணிப்புக் குழுவின் ஆணைக்கு தடை பெற வேண்டும் - என்றும் அவர் கூறியுள்ளார்.

(ஐ)

# நானும் பிரதமர் மோடியும் தமிழ் கற்று வருகிறோம்!

## தமிழ்நாடு ஆளுநர் ரவி

சென்னை, செப். 05

"நான் தமிழை கற்று வருகிறேன். கண்டிப்பாக ஒருநாள் சரளமாக தமிழ் பேசுவேன். என்னைப் போலவே பிரதமர் நரேந்திர மோடியும் தமிழ்மொழியை கற்று வருகிறார் - என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள்ளார்.

"செப்பு மொழி பதினெட்டுடையாள் எனிற் சிந்தனை ஒன்றுடையாள்" என்ற சிறப்புப் பெற்ற மொழிதான் தமிழ். அனைத்து மாநிலங்களுக்கும் தமிழ் மொழியை எடுத்து செல்ல வேண்டும். தமிழ் பத்திரிகைகளை வாசிக்கிறேன். யாராவது தமிழில் பேசினால் புரிந்து கொள்கிறேன்.



தமிழ் மிகவும் பழமையான, அழகான மொழி - சக்திவாய்ந்த மொழி - மற்றவர்களைப் போல தமிழை சரளமாக பேச வேண்டும் என்பது எனது விருப்பம். நான் தமிழை கற்றுக் கொண்டு வருகிறேன். கண்டிப்பாக ஒரு நாள் சரளமாக தமிழ் பேசுவேன். என்னைப் போலவே பிரதமர் நரேந்திர மோடியும் தமிழ்மொழியை கற்றுக் கொண்டு வருகிறார்"- என்றார்.

(ஐ)

# தீண்டாமை அதிகரிப்பு!



சென்னை, செப். 05

தமிழ்நாட்டில் தீண்டாமை தலைவிரித்தாடுகிறது என்று மத்திய இணை மந்திரி எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது எக்ஸ் தளத்தில் இட்ட பதிவில்,

தலைவரித்தாடும் தீண்டாமை கொடுமை. மனித நாகரிகம் அருவெறுக்கச் செய்யும் செயலை தடுத்து நிறுத்த திராணியற்ற போலி திராவிட மொடல் ஆட்சி. தமிழ்நாட்டில் குடிநீர் தொட்டிகளில் மலம், மாட்டுச்சாணம் போன்றவற்றை கலக்கும் நிகழ்வுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. கல்வி எனும் அறிவு தீபத்தை ஏற்றும் பள்ளிகளில் மலம் பூசும் அவலங்கள் அடுத்தடுத்து அரங்கேறி வருகின்றன.

தமிழகத்தின் பலப்பகுதிகளில் தீண்டாமை, இரட்டைக்குவளை, இரட்டை சுடுகாடு, கோயில்களுக்குள் பட்டியலின மக்கள் செல்ல முடியாத சூழல் நிலவுகிறது. அரசு பள்ளிகளில் பாதுகாப்பற்ற சூழல் உள்ளது. தமிழகம் முழுவதும் அரசுப் பாடசாலைகளில் சுற்றுச்சுவர், இரவுக் காவலாளி இல்லாததால் மது அருந்துவோரின் கூடாரமாக பாடசாலைகள் மாறி வருகின்றன.

உலகின் பல பகுதிகளில் இல்லாத இந்த மாபெரும் சமூக அநீதி தொடர்ந்து நிகழ்வது திமுகவினர் திராவிட பெருமை பேசும் தமிழகத்தில் தான் என்பது வேதனையான ஒன்று. திராவிட மாடல் சாதனை ஆட்சி நடத்துவதாக தற்பெருமை பேசும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தில் நடக்கும் இதுபோன்ற அவலங்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்..? - என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிக்கலாக மாறியுள்ள கடவுச்சீட்டு பிரச்னை!


## சபையில் சுட்டிக்காட்டினார் சஜித்

கொழும்பு, செப். 05

கடவுச்சீட்டு வழங்குவதில் காணப்படுகின்ற பிரச்னை பாரிய சிக்கலாக மாறியிருக்கின்றது. 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து டிசெம்பர் மாதம் வரை 83,000 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டு இருக்கின்றன. 2024 ஆம் ஆண்டு மாதம் ஒன்றுக்கு 60,000 கடவுச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது விநியோகிக்கப்படுகின்ற சாதாரண கடவுச்சீட்டுக்கு பதிலாக எலக்ட்ரோனிக் கடவுச்சீட்டு வழங்க மேற்கொண்ட முயற்சியின் செயற்பாடு தோல்வியில் முடிவடைந்து இருக்கிறது. இந்த முறையை அறிமுகப்படுத்தும் வரை மக்களுக்கு சாதாரண கடவுச்சீட்டை வழங்கவேண்டும். அதனை சாதாரணமாகவும் தொடர்ந்தும் வழங்க முடியாத நிலை குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு எலக்ட்ரோனிக் கடவுச்சீட்டுக்களை அறிமுகப்படுத்தும் வரை அரசாங்கம் கடவுச்சீட்டுக்கலுக்கான விண்ணப்பங்களுக்கு கடவுச்சீட்டுக்களை வழங்கவேண்டும். இதுவரை நாளொன்றுக்கு 2000 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்க வேண்டி இருந்த போதும், 900 கடவுச்சீட்டுக்களே விநியோகிக்கப்படுகின்றது. இதனால் நீண்ட வரிசை ஏற்பட்டு பாரிய சிக்கல் நிலையை தோற்றுவித்திருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் குடிவரவு குடியகல்வுத்திணைக்களத்திடம் காணப்படுகின்ற கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை 30 000 வரை குறைந்திருக்கின்றது. ஈ-கடவுச்சீட்டு விநியோகத்தில் கொள்வனவு நடைமுறை எதனையும் பின்பற்றவில்லை. தகுதி இல்லாத நிறு



வனங்களுக்கு அவற்றை வழங்கி இருப்பதனால், இந்த செயற்பாட்டை முன்னெடுக்க முடியாதுள்ளது. இதற்காக சாதாரண விலை மனுக் குரல் இடம் பெற்றிருக்க வேண்டும். அதையும் முறையாகச் செய்யவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சாதாரண கடவுச்சீட்டுகளை அச்சிடும் நிறுவனங்களுக்கு அதனை அச்சிடுவதற்கான போதுமான தொகைகள் வழங்கப்படவில்லை. கடவுச்சீட்டுக்களுக்கான கேள்விகள் என்ன என்பது குறித்து குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு தெரியாதா என்கின்ற ஒரு சிக்கலும் ஏற்படுகின்றது. அது குறித்து பிரச்சினைகள் இல்லை என்பதால் மாதத்துக்கு 1.1 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது. எனவே இந்த சிக்கலுக்கு விரைவான தீர்வு பெற வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# மக்களிடம் நெருக்கடி நிலைக்கு மன்னிப்பு கோரினார் ஜனாதிபதி

## ஒக்ரோபர் முதல் நவீன கடவுச்சீட்டு

கொழும்பு, செப். 05

கடவுச்சீட்டு பெறும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள நெரிசலை விரைவில் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அத்துடன், கடவுச்சீட்டு தொடர்பில் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு அரசாங்கம் என்ற ரீதியில் மக்களிடம் மன்னிப்பு கோருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த நிலையில், ஏற்றுமதி பொருளாதாரத்துக்கு விரைவில் நாம் மாறாவிட்டால், 2035 முதல் 2040 வரையான ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மீண்டும் ஒரு நெருக்கடி நிலை ஏற்படலாம் எனவும் அவர் சுட்



டிக்காட்டினார்.

அத்துடன், இனம், சாதி, மதம் அன்றி நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் குறித்து கருத்தில் கொள்ளப்படும் தேர்தலை எதிர்கொள்வதில் தாம் மகிழ்ச்சியடைவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, ஒக்ரோபர் மாதம் முதல் நவீன கடவுச்சீட்டை குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமென அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார். (அ)

# மீன்பிடித்துறையை வலுப்படுத்தும் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, செப். 05

இலங்கையின் மீன்பிடித் துறைக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள மூலோபாய கட்டமைப்பிற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மீன்பிடித் தொழில்துறையினை ஒரு முக்கிய பொருளாதார உந்துதலாக நிலைநிறுத்தும் வகையில் ஜனாதிபதி மற்றும் மீன்பிடி அமைச்சரினால் குறித்த பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தது.

குறித்த திட்டத்தின் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் மீன்பிடித் துறையானது ஏற்றுமதி வருவாயில் 600 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

# நல்லடக்கம் செய்தல், தகனம் செய்தல் உரிமைச் சட்டத்தை சமர்ப்பிக்க அனுமதி

கொழும்பு, செப். 05

நல்லடக்கம் செய்தல், தகனஞ் செய்தல் உரிமைச் சட்டத்தை அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.



அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

உயிரிழந்த பின்னர், ஒவ்வொரு நபர்களின் உடலங்களையும் அகற்றுகின்ற விதம் தொடர்பாகத் தீர்மானிக்கின்ற உரிமையை குறித்த நபருக்கே வழங்குவதற்காகவும், தனது உடலத்தை அகற்ற வேண்டிய விதம் பற்றிய விருப்பத்தைத் தெரிவிக்காதவர்கள் உயிரிழக்கின்றபோது, உயிரிழந்தவரின் அபிலாசைகள் மற்றும் மத ரீதியான, கலாசார அல்லது தனிப்பட்ட நம்பிக்கைகளைக் கருத்தில் கொண்டு உயிரிழந்தவரின் உடலத்தை நல்லடக்கம் செய்ய வேண்டுமா அல்லது தகனஞ் செய்ய வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கின்ற உரிமை அந்நபரின் நெருங்கிய உறவினருக்கு ஒப்படைக்கின்ற வகையில் ஏற்பாடுகளை வகுப்பதற்காக சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த ஒருங்கிணைந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)





# வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பெருவிழா சிறப்புற நடந்தது

யாழ்ப்பாணம், செப். 05

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையில், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய, வடமராட்சி கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன் தினம் வடமராட்சியில் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில், விருந்தினர்கள் மாலை அணிவித்து மண்டபம் நோக்கி அழைத்துச் செல்லப்பட்டு, மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு, காலை 9.00 மணியளவில் ஆரம்பமானது.

பண்பாட்டு பெருவிழாவில், அரங்க திறப்பு, கிராமிய பாடல்கள், ஒகன் இசை, சிவதாண்டவம், சிந்துநடைக்கூத்து, நாட்டுக்கூத்து, கலைஞர் கௌரவிப்பு போன்றன இடம்பெற்றன.

பிரதம விருந்தினராக, யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக, வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு பிரதி பணிப்பாளர் திருவாட்டி லாகினி நிருபராஜ் மற்றும் வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஓய்வு நிலை ஆணையாளர் வல்லிபுரநாதர் பத்மநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

கௌரவ விருந்தினர்களாக, யாழ்ப்பாண மாவட்ட செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் சுகுணாலினி விஜயரத்தினம், மூத்த கலைஞர்களான கலைச்சாரம் செல்லையா பரமானந்தம், அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை பிலிப்பையா ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்வில், மக்கள், கலாசார உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் என பலரும் பங்கேற்றனர். (அ-2)

# தென்கொரியா உற்பத்தித்துறைகளில் 107 இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பு

கொழும்பு, செப். 05

தென்கொரியாவில் உற்பத்தித் துறையில் தொழில்வாய்ப்பைப் பெற்ற 107 இளைஞர்கள் தென்கொரியாவுக்குச் சென்றதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் தென் கொரிய மனிதவள அபிவிருத்தி நிறுவகத்திற்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், இந்த குழுவினர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்பப்பட்டதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2024 ஜனவரி முதல் தற்போது வரையான 8 மாதங்களில் 83 பெண்கள் உட்பட 4,368 இலங்கையர்களுக்கு தென் கொரியாவில் தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் 5 வருடங்களுக்கு ரணில் மிக அவசியமானவர்

## எஸ்.பி. திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, செப். 05

**இந்த நாட்டுக்கு எதிர்வரும் 05 வருடங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் அவசியமானவரென்பதை நாட்டு மக்கள் சிந்தித்து தீர்மானம் எடுப்பது முக்கியமென பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஜித் பிரேமதாசவோ, அநுர குமார திசாநாயக்கவோ இந்த நாட்டை ஒருபோதும் முன்னேற்றப்போவதில்லை. மக்களுக்கும் அவர்களால் எவ்வித சிறந்த எதிர்காலமும் கிடைக்கப் போவதில்லை எனவும், அவர்கள் வழங்கியுள்ள வாக்குறுதிகள் நடைமுறைக்கு சாத்தியமற்றவை என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். சஜித் பிரேமதாஸ நெருக்கடியான காலத்தில் நாட்டையும் மக்களையும் பொறுப்பேற்கத் தவறியவர். அதேபோன்று ஜே.வி.பியின் ஆரம்பமே திருட்டு, கொள்ளை, படுகொலை, வன்முறை, கப்பம் பெறுவதில் தான் ஆரம்பித்தது. இன்றும் அவர்கள் மாறவில்லை என்பது ஆர்ப்பாட்டக் காலத்தில் தெளிவாக தெரிந்தது. ஐக்கிய தேசியக் கட்சியில் தேர்தலில் போட்டியிட்டவர்களை படுகொலை செய்தமை, பொலிஸார் மற்றும் படையினரை படுகொலை செய்தமை, அரசாங்க பஸ்களுக்கு தீ வைத்தமை, வேறு கட்சிகளில் தேர்தலில் நின்றால் அவர்களுக்கு தண்டனை வழங்குகின்றமை, திருட்டுக்கள், கொள்ளைகள் என அவர்களின் ஆரம்பமே மிகவும் மோசமாக இருந்தது

மிக நெருக்கடியான நிலையில் காணப்பட்ட நாட்டை குறுகிய காலத்தில் பாதுகாத்து இயல்பு நிலைக்கு கொண்டு வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே. எதிர்காலத்திலும் அவருக்கு உதவி ஒத்துழைப்புக்களை வழங்குவதற்காக சர்வதேச நாடுகள் காத்திருக்கின்றன. அந்த வகையில், எதிர்வரும் 05 வருடங்களுக்கு நாட்டை அவரிடம் ஒப்படைக்க வேண்டும். தற்போது நடைமுறைப்படுத் தப்பட்டுவரும் வேலைத் திட்டங்களை முழுமையாக முன்னெடுப்பதற்கு அவரால் மட்டுமே முடியும்-என்றார். (அ)

# நாணய நிதிய நிபந்தனைகள் நாட்டுக்குப் பாதிப்பு இல்லை!

## கூறுகின்றார் அனுரகுமார

கொழும்பு, செப். 05

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் நாட்டுக்கு பாதிப்பில்லை என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வர்த்தக கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்துடனான இந்த திட்டமானது, நமது சர்வதேச உறவுகள் அனைத்தையும் சர்வதேச நாணய நிதியம் என்ற கூடையில் சேர்க்கப்பட்டுள்ளது. இரு தரப்பு கடன் பரிவர்த்தனைகள் சர்வதேச நாணய நிதியத்தின் கூடைக்குள் காணப்படுகின்றன. எமது அனைத்து எதிர்கால செயற்பாடுகளும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான தருணத்தில் யாராவது ஒருதலைப்பட்சமாக திட்டத்திலிருந்து விலக நினைத்தால், அது குடிமகன் அல்லது நாட்டிற்கான பொறுப்பை கைவிடுவதாகும்.

எனவே நாங்கள் உங்களுக்கு உத்தரவாதம் தருகிறோம். சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து ஒருதலைப்பட்சமாக விலகும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. ஆனால் சர்வதேச நாணய நிதியத்தால் நாம் நிறைவேற்ற வேண்டிய பல அளவுருக்கள் உள்ளன. அடுத்த ஆண்டு முதன்மை கணக்கு இருப்பு 2.3 ஆக இருக்க வேண்டும். 2032இற்குள் நமது கடன் விகிதம் 98 வீதமாக இருக்க வேண்டும். எங்களுக்கு பல அளவுருக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை ஒரு நாட்டுக்கு தீங்கானவை அல்ல. அவற்றை அடைவது ஒரு மோசமான விடயம் அல்ல. யார் ஊடாக கொடுத்தாலும் அது மோசமான பொருளாதார இலக்கு அல்ல- என்றார். (அ)

# மதுபானக் கோட்டாக்களை பெற்றோர் விவரம் விரைவில்!

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத்

கொழும்பு, செப். 05

மதுபான "லைசன்ஸ்களுக்காக" ரணிலை ஆதரித்தோர், இரகசியமாக மதுபான கோட்டாக்களை பெற்றுக்கொண்டோரின் விபரங்கள், எதிர்வரும் சஜித் பிரேமதாசவின் ஆட்சியில் பகிரங்கப்படுத்தப்படுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.



ஐக்கிய மக்கள் கூட்டணியில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து மன்னாரில் நடந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது-

கோட்டாபயவின் இனவாத ஆட்சியால், நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்தது. சிங்களப் பெரும்பான்மை வாக்குகளாலேயே, ஆட்சிக்கு வந்ததாக மமதையுடன் நடந்துகொண்டார் கோட்டா. மதங்களைப் புண்படுத்துமளவுக்கு அவரது மனநிலை இறுமாப்படைந்தது. கொரோணாவில் மரணித்த முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்களை நல்லடக்கம் செய்யவிடாமல் தீயில் எரித்தார். இந்த அராஜகத்துக்கு உடந்தையாக இருந்த அமைச்சர்கள், எம்.பி.க்களே இன்று ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துள்ளனர்.

நாங்கள் செய்தவற்றை நிறுத்துவதற்கென்றே, இங்கு ஒரு இராஜாங்க அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்டுக்கரைக்குளம், வியாயடிக்குளம், நெடுங்கண்டல் குளம் மற்றும் அஹத்திக்குளம் போன்ற விவசாயக் குளங்களைப் புனரமைத்து, இருபோக நெற்செய்கைக்கு வாய்ப்புக்களை வழங்கவுள்ளோம்.

இங்கே வெள்ளமாகத் திரண்டுள்ள மக்கள் பணத்துக்காகவோ, சாப்பாட்டுப் பார்சல்களுக்காவோ சேர்த்த கூட்டமல்ல. சஜித் பிரேமதாசவை வெல்ல வைக்கும் ஒரே வேட்கையோடு சேர்ந்த கூட்டம். சஜித்தின் வெற்றிக்காக அமோக ஆதரவளித்த பெருமையில் முதலிடம் பிடிக்க, மன்னார் மாவட்ட மக்கள் முந்திக்கொள்ளவேண்டும்-என்றார்.

# வடக்கு-கிழக்கின் அபிவிருத்திக்காக சர்வதேச நன்கொடையாளர் மாநாடு

## சஜித் பிரேமதாச மன்னாரில் தெரிவிப்பு

மன்னார், செப். 05

யுத்தத்தினால் பெருமளவு பாதிக்கப்பட்ட வடகிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக வளமான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு கடந்த காலங்களில் இருந்த எந்த ஒரு தலைவருக்கும் முடியாமல் போயிருக்கின்றது. எனவே தான் ஜனாதிபதியான உடனே வடக்கு-கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு, யுத்தத்தின் பின்னரான பாரிய அபிவிருத்திக்காக சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை கூட்டி, வடக்கையும் கிழக்கையும் மையமாகக் கொண்ட பாரிய அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுப்போம். ஏனைய மாகாணங்களுக்கும் அதன் பிரதிபலன் செல்லக்கூடிய வகையில் அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த மக்கள் வெற்றிப் பேரணி தொடரின் 32 ஆவது கட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில்



நேற்று முன் தினம் மன்னாரில் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சனத் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2022 ஆம் ஆண்டு மேற்கொண்ட கணக்கெடுப்பின் ஊடாக, அந்தந்த மாகாணங்களில் தேசிய உற்பத்திக்காக அவர்கள் வழங்குகின்ற பங்களிப்பையும் கணக்கிட்டு இருக்கின்றார்கள். அதில் 43.4 வீதத்துக்கு மேல் மாகாணத்தில் கிடைக்கின்றது. வட மாகாணத்தின் பங்களிப்பு 4.1. வீதமாகவும், கிழக்கு மாகாணத்தின் பங்களிப்பு 5.2 வீதமாகவும் காணப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக இந்த பங்களிப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, தரவுகளையும் தகவல்களையும் மையமாகக் கொண்டு முழு நாட்டையும் அபிவிருத்தியின் பால் விட்டு செல்வோம்.

கடந்த அரசாங்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வீடமைப்பு திட்டத்தை மீண்டும் உருவாக்குவோம். வீட்டுக்கடன்களை வழங்கி வீடமைக்கும் யுகத்தை உருவாக்குவோம். இன, மத, குல, வகுப்பு பேதங்கள் இன்றி காணிகள் இல்லாதவர்களுக்கு காணிகளை வழங்கும் கம் உதாவ திட்டத்தை மீண்டும் கொண்டு வருவோம்.

பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்களுக்கு முதலிடம் வழங்கப்படுவதோடு, இளைஞர்களுக்காகவும் விசேடமான வேலை திட்டங்களை முன்னெடுப்போம்.

மன்னாருக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான போக்குவரத்து தொடர்பை மையமாக வைத்து பாரிய அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுக்க முடியும். சுற்றுலாத்துறை மற்றும் உற்பத்தி தொழிற்துறை உருவாக்கி பலமிக்க அபிவிருத்தியை கொண்டு வர முடியும்-என்றார்.

# விஞ்ஞாபனங்களில் உள்ள கொள்கைகளை என்னை தவிர எவரும் செயல்படுத்தமுடியாது

## ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர

கொழும்பு, செப். 05

தம்மைத்தவிர மற்ற அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் தம்மைச் சூழவுள்ள அரசியல் குழுக்களால் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ள கொள்கைகளை நடைமுறைப்படுத்த முடியாது என சர்வஜன அதிகார ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

காலியில் நடைபெற்ற சிநேகபூர்வ சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில்-

யாரும் எதிர்க்க முடியாத வெற்றிக்கான பயணத்தையும் நான் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். ஏனெனில் சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் வரலாற்று ரீதியாக வளர்ந்த பாரம்பரிய அரசியலில் ஏற்பட்ட அனைத்து தவறுகளையும் சரி செய்யக்கூடிய ஒரு மூலோபாய வேலைத்திட்டத்தை உருவாக்குவதற்கு நாங்கள் மிகவும் கடினமாக உழைத்துள்ளோம். உலகின் பிற நாடுகள் இந்த சூழ்நிலையை எவ்வாறு எதிர்கொண்டன, அவர்கள் என்ன மூலோபாயங்களை பயன்படுத்தினார்கள், ஒரு தேசமாக நாம் எங்கு தவறு செய்தோம், இவை அனைத்தையும் பார்த்து இது அமைக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவையை பலப்படுத்துவதில் ஜனாதிபதி ரணில் அதிகளவு கவனம்

## வஜிர அபேவர்தன கூறுகிறார்

கொழும்பு, செப். 05

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யதார்த்தமான முறையில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்துள்ள நிலையில் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களும் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி வருவதுடன் அதனை அவர்களால் நிறைவேற்ற முடியுமா என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**



கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் 15 இலட்சம் அரச ஊழியர்கள் உள்ளனர். 5 இலட்சம் ஓய்வூதியதாரிகளும் 65 இலட்சம் சேமலாப நிதியை பெறுவோரும் உள்ளனர்.

இவர்களே நாட்டின் பொருளாதார வேகத்தை தீர்மானிக்கும் சக்தியாக உள்ளனர். இம்முறை ஒரு கோடியே 70 இலட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

தேர்தல் நடப்பதால் நாட்டின் பொருளாதார வேகத்தை மட்டுப்படுத்த முடியாது. கடந்த காலத்தில் அரச ஊழியர்கள் உள்ளடங்கலாக நாட்டின் அனைத்து பிரஜைகளும் பொருளாதார நெருக்கடியின் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தனர்.

2001 ஆம் ஆண்டிலும் அப்போதைய அரசாங்கம் நெருக்கடிக்கு முகம்கொடுத்த போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே அன்றும் நாட்டை பொறுப்பெடுத்தார்.

ஆனால் அப்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்வைத்த பொருளாதார வேலைத்திட்டத்தை மக்கள் ஏற்கவில்லை.


அதனால் இனவாதமும் மதவாதமும் நாட்டுக்கு பரவ ஆரம்பித்தது.

நாடு வேறு திசையை நோக்கி நகர்ந்தது. மீண்டும் அரச சேவையைப் பலப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கவனம் செலுத்தியுள்ளார்.

அரசாங்க ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை 55,000 ஆக உயர்த்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தற்போதும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்-என்றார். (அ)

# சமூக நீதி ஆணைக்குழுவொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்



கொழும்பு, செப். 05

தங்களது அரசாங்கத்தின் கீழ் சமூக நீதி ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்படும் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி - பெல்மதுல்ல பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் வருமானத்தைக் குறைத்து செலவை அதிகரித்ததால் நெருக்கடி ஏற்பட்டது.

எமக்குத் தேவையான அந்நிய செலாவணியை நாம் ஈட்டாவிட்டால், எதிர்வரும் 10 அல்லது 15 வருடங்களில் மீண்டும் அதேநிலை ஏற்படும்.

அதேநேரம், எதிர்வரும் காலங்களில் பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்கள் இன்று சமூகத்தில் ஒடுக்குமுறைக்குப் பலவிதமான உள்ளாகியுள்ளனர்.

சமூகத்தில் தமக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படாமையினால் சிலர் மிகவும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அவற்றை இல்லாமல் ஒழிப்பதற்கு சமூக நீதி ஆணைக்குழுவொன்று ஸ்தாபிக்கப்படும்.

அதேநேரம் தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், பாராளுமன்ற உறுப்பினர்களின் தேவையற்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# சஜித்-ரணில் இனி இணையமுடியாது

## நளின் பண்டார தெரிவிப்பு

கொழும்பு, செப். 05

அரசாங்கத்தினால் பரப்பப்படுகின்ற வகையில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றிணைய முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஜித் பிரேமதாசவின் வெற்றி உறுதியாகி வருகின்றது.

இதனை அறிந்து ரணில் விக்ரமசிங்கவின் உதவியாளர்கள், ரணில் விக்ரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் இணைய வேண்டும் என கூறுகின்றனர்.

இது நடைபெறாத ஒரு விடயமாகும். இவ்வாறான கருத்துக்களுக்கு பொது மக்கள் ஏமாற்றமடையக் கூடாது.

2019ஆம் ஆண்டு சஜித் பிரேமதாசவின் வெற்றியை முறியடித்த ராஜபக்ஷ தரப்பினருடன் இணைந்துள்ள தரப்பினரே இன்று இவ்வாறான கருத்துக்களை முன்வைக்கின்றனர்-என்றார். (அ)

# அரச ஊழியருக்கு சம்பள உயர்வு வாக்குறுதி பிரதான வேட்பாளர்கள் தகுதிநீக்கப்படலாம்

## விஜயதாச ராஜபக்ச சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 05

தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான கட்சிகளின் வேட்பாளர்களில் எவர் வென்றாலும் இரண்டு மூன்று மாதங்களில் அவர்கள் தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள் என ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் முன்னாள் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்க ஊழியர்களுக்கு பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் சம்பள உயர்வு குறித்த வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர். இது இலஞ்சம் போன்றது என தெரிவித்துள்ள அவர் இதன் காரணமாக அவர்கள் தகுதிநீக்கம் செய்யப்படுவார்கள்.

இது தேர்தல் விதிமுறைகளை மீறிய செயல் என முறைப்பாடு அளிக்கப்பட்டால், பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் தகுதி நீக்கப்படலாம்.

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களின் செலவுகள் குறித்த ஆதாரங்களை சேகரித்து வருகின்றோம். தேர்தல் ஆணைக்குழுவுடன் இது குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம்.

வேட்பாளர்களின் சொத்துக்கள் குறித்த பிரகடனம் குறித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளும். இதன் காரணமாக அவர்கள் கைது செய்யப்படலாம்-என்றார். (அ)

# நடைமுறைக்கு சாத்தியமான திட்டங்கள் ரணிலின் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கம்

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ

கொழும்பு, செப். 05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நடைமுறைக்கு சாத்தியமான பொருளாதார திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்திருந்த போது



ரணில் விக்கிரமசிங்கவின் தூரநோக்குடைய சிந்தனையால் அதிலிருந்து மீளக்கூடியதாக இருந்தது. அவரால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை முன்கொண்டு செல்ல வேண்டும்.

சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் சுமார் எண்பதாயிரம் வியாபாரங்கள் மூடப்பட்டன.

அவர்களை, பழைய நிலைமைக்கு கொண்டுவரக்கூடியதாக இருந்தது. ஆதலால் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டியது அவசியமாகும்.

ஏனைய வேட்பாளர்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில், சலுகைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சலுகைகளை வழங்குவதற்கான வருமான மூலம் பற்றி தெரிவிக்கப்படவில்லை - என்றார். (அ)

# வரிகளை விதிப்பதனால் நாட்டை ஒருபோதும் மீட்டெடுக்கமுடியாது

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, செப். 05

வரி விதிப்பதும் சொத்துக்களை விற்பதும் மட்டுமே அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான ஒரே வழி எனில் நாட்டு மக்களால் நிம்மதியாக வாழ முடியாது என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிவித்திகல பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் அபிவிருத்தி செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அதுமாத்திரமன்றி, இளைஞர்கள் பலர் வேலைவாய்ப்புகளை இழந்ததுடன், வர்த்தகங்களும் பாரியளவில் வீழ்ச்சியை சந்தித்துள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக மாயையொன்றை தோற்றுவித்து எமது அரசாங்கம் சதியால் வீழ்த்தப்பட்டது.

இன்று வரிசைகள் ஒழிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற போதிலும், கடவுச்சீட்டு வரிசை தொடர்ந்தும் நீண்டுக்கொண்டே சென்றது.

அதனைக் கட்டுப்படுத்த ஒருபுறம் நடவடிக்கை எடுக்கும் போது, விமான நிலையத்தில் விசாவுக்கு வரிசையொன்று ஏற்பட்டுள்ளது.

மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவில் வரிகளை விதிப்பதால், நாட்டையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் ஒருபோதும் மீட்டெடுக்க முடியாது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதான அரச உத்தியோகத்தரிடம் விசாரணை

அம்பாறை, செப். 05

**சுமார் 4 அரை இலட்சம் ரூபா பெறுமதி மிக்க ஐஸ் போதைப் பொருட்களுடன் சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.**



கல்முனை விசேட அதிரடிப் படையின் விசேட தேர்ச்சி பெற்ற புலனாய்வு பிரிவின் தகவலுக்கமைய நீண்ட நாட்களாக சூட்சுமமான முறையில் ஐஸ் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் விநியோகம் செய்து வந்த குறித்த சந்தேக நபரை சாய்ந்தமருது பிரதான வீதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் சம்மாந்துறை பகுதியில் உள்ள கல்வி திணைக்களத்தில் பணி புரிவதுடன் சூட்சுமமாக ஐஸ் போதைப்பொருளை சாய்ந்தமருது உட்பட கல்முனைக்கு நீண்ட காலமாக விநியோகித்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டார்.

43 வயது மதிக்கத்தக்க குறித்த சந்தேக நபர் 25 கிராம் ஐஸ் போதைப்பொருளினை பைகளில் உறையிட்டு மிக சூட்சுமமாக கடத்தி வந்த நிலையில் மோட்டார் சைக்கிளுடன் கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர். (அ)



# தேசிய பொலிஸ் தினத்தை முன்னிட்டு ஏறாவூரில் விஷேட துஆ பிராத்தனை

அம்பாறை, செப். 05

இலங்கையின் 158ஆவது தேசிய பொலிஸ் தினத்தினை சிறப்பிக்கும் வகையில் விஷேட துஆ பிராத்தனை நிகழ்வு கடந்த செவ்வாய்கிழமை ஏறாவூர் முகைதீன் ஜூம்ஆ பள்ளிவாசலின் தலைவர் எஸ்.எல்.எம். நழீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஏறாவூர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு.பியந்த , ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹர்சடி சில்வா உட்பட பொலிஸ் நிலையத்தின் உப பரிசோதகர்கள், பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இலங்கை பொலிஸாருக்கு நீண்ட ஆயுள் வேண்டியும் நாட்டுக்காக நல்ல பல சேவைகள் தொடரவும் விஷேட பிராத்தனை நிகழ்வுகள் இதன்போது இடம்பெற்றன. (அ)








கல்முனை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட லீடர் எம். எச். எம். அஷ்ரப் வித்தியாலயத்தில் அதிபர் எம். ஐ. சம்சுதீன் மற்றும் இணைப் பாட விதானத்துக்குப் பொறுப்பான ஆசிரியர் எம். எப். றிஸ்வி ஹாதிம் ஆகியோரின் ஆலோசனை, வழிகாட்டலில் ஆரம்பப் பிரிவு முதன்மை நிலை மாணவர்களின் மாணவர் மன்றம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் வருடாந்த மஹோற்சவம் நேற்று ஆரம்பம்!





மட்டக்களப்பு, செப். 05

இலங்கையின் சிறப்பு மிக்க பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று காலை ஆரம்பமானது.

ஆலயத்தின் பிரதமகுரு சிவ ஸ்ரீ மு.கு.சச்சிதானந்த குருக்கள் தலைமையில் இந்த மஹோற்சவ கிரியைகள் ஆரம்பமாகின.

மூலமூர்த்திக்கு அபிஷேக பூசையுடன் விசேட பூசை இடம்பெற்றதனைத் தொடர்ந்து கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை ஆலயத்தை வலம் வந்து கொடிச்சீலைக்கு விசேட பூசைகள் இடம்பெற்றதுடன், வேத பாராயணத்துடன் மேள நாதஸ்வர இசை முழங்க மணியோசைகளின் மத்தியில் பக்தர்களின் அரோகரா ஓசையுடன் கொடியேற்றம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



விவசாயிகள் நிரம்பிய படுவான்கரை மண்ணின் மகத்துவத்தினை வெளிப்படுத்தும் வகையில் நெற்கதிர்களால் பின்னப்பட்ட கொடிச்சீலை கயிறுகள் கொண்டு கொடியேற்றம் நடைபெற்றமை இந்த ஆலயத்திற்கு மட்டும் உள்ள சிறப்பாகும்.

இதனையடுத்து தம்பத்துக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்றதுடன் பூசைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி வலம்வரும் நிகழ்வு இடம்பெற்றது. (அ)

# கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் ம.வி. மாணவர்களுக்கு இலவச காலணி வழங்கல்

அம்பாறை, செப். 05

ஸதகா புளட்டின் நலன்புரி நிறுவனத்தின் அனுசரணையில் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களுக்கு பாதணிகள், அப்பியாசக் கொப்பிகள் மற்றும் புத்தகப்பைகள் என்பன வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் ஏ.ஜி. எம்.றிசாத் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந் நிகழ்வில் ஸதகா புளட்டின் நிறுவனத்தின் பணிப்பாளரும், பொறியியலாளருமான எம். சீ.கமால் நிஸாத் பிரதம அதிதியாக கலந்துகொண்டு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பொதிகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர், ஆசிரியர் ஏ.எம். எம் ஸாஹிர் , பாடசாலையின் பிரதி அதிபர் . எம்.ரீ.ஏ.மனாப், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுச் செயலாளர், உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கேரளக் கஞ்சா, ஐஸ்டன் இருவர் ஆரையம்பதியில் கைது

மட்டக்களப்பு, செப். 05

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பிரதேசத்தில் கேரளா கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் 32, 38 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் மேற்கொண்ட திடீர் தேடுதலின் போது குறித்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களின், ஒருவரிடம் இருந்து ஒன்றரை கிலோ கேரளக் கஞ்சாவும் மற்றவரிடம் இருந்து 25,000 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் வர்த்தக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நீண்ட நாட்களாக இப்பிரதேசத்தில் போதைப்பொருள் விற்பனை செய்து வந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடகொரிய வெள்ளத்தில் ஆயிரம் பேர் பலி:

# தடுக்கத் தவறிய அதிகாரிகள் 30 பேருக்கு மரண தண்டனை!



சியோல், செப். 05

**வடகொரியாவில் கடந்த ஜூலை மாதம் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இதனைத் தடுக்கத் தவறிய 30 அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கிம் ஜோங் உன் உத்தரவுப்படி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.**

வடகொரியாவின் வடமேற்கு பகுதியில் கடந்த ஜூலையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் 4 ஆயிரத்து 100 வீடுகள் அழிவடைந்தன. 7 ஆயிரத்து 410 விவசாய நிலங்கள் அழிந்தன. மற்றும் பல அரச கட்டடங்கள், வீதிகள், ரயில் பாதைகளும் அழிவடைந்தன. 15 ஆயிரத்துக்கும் அதிகமான வர்கள் இடம்பெயர்ந்தனர்.

இந்த வெள்ளப் பாதிப்பைத் தடுக்கத் தவறிய அதிகாரிகளை கண்டறிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் உத்தரவிட்டிருந்தார். இதைத் தொடர்ந்து நடந்த விசாரணைகளில் 30 பேர் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து, அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாகத் தென்கொரியா கூறியுள்ளது. தென்கொரிய தொலைக்காட்சி வெளியிட்ட இந்த செய்தியை வடகொரியா இதுவரை மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# உக்ரைன்மீது ரஷ்யா தாக்குதல்; 51 பேர் மரணம்! 270பேர் காயம்


கீவ், செப். 05

உக்ரைனின் மத்திய பகுதியை குறிவைத்து ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் உக்ரைன் இராணுவத்தினர் உட்பட 51 பேர் உயிரிழந்தனர். 270இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இது தொடர்பில் உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில்,

"உக்ரைனின் மத்திய பகுதியின் போல்டாவா நகரத்தின் மீது ரஷ்யா திடீரென ஏவுகணை தாக்குதலை நடத்தியது. முன்னதாகவே எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்ட போதிலும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல போதிய அவகாசம் கிடைக்கவில்லை. இதனால், இராணுவத்தினர் உட்பட 51 பேர் உயிரிழந்தனர். 270இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் - என்றுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு தகுந்த பதிலடியை ரஷ்யாவுக்கு கொடுப்போம் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சூளுரைத்துள்ளார். (ஐ)



# மரதன் ஓட்ட வீராங்கனையை தீ வைத்து எரித்த காதலன்!

கம்பாலா, செப். 05

உகண்டா நாட்டின் ஒலிம்பிக் மரதன் ஓட்ட வீராங்கனையை அவரின் காதலன் பெற்றோல் ஊற்றி எரித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 75 சதவீத தீக்காயமடைந்த ரெபேக்கா செப்டேகி என்ற அந் வீராங்கனை மருத்துவமனையில் உயிருக்குப் போராடி வருகிறார்.

பாரிஸில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற ரெபேக்கா அண்மையில் நாடு திரும்பியிருந்தார். கென்யா நாட்டுக்கு சென்ற அவர் தனக்கு சொந்தமான வீட்டில் ஓய்வை கழித்துள்ளார்.

இதன்போது, அவருக்கும் அவரின் காதலனுக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதன்போது, காதலன் ரெபேக்கா மீது பெற்றோலை ஊற்றி தீ வைத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இதையடுத்து, அவரின் காதலரான டானியல் என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# உக்ரைனின் முக்கிய அமைச்சர்கள் நால்வர் தமது பதவிகளை துறந்தனர்!

கீவ், செப். 05

உக்ரைன் ஜெலன்ஸ்கி தலைமையிலான அமைச்சரவையிலிருந்து நான்கு முக்கிய அமைச்சர்கள் தமது பதவியிலிருந்து விலகியுள்ளனர்.

ஐரோப்பிய விவகாரங்களுக்கான துணை பிரதமர் ஒல்கா ஸ்டெபானிஷினா, தொழில் துறை மூலோபாய அமைச்சர் ஒலெக்சாண்ட்ர் கமிஷின், நீதித் துறை அமைச்சர் டெனிஸ் மலியுஸ்கா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ருஸ்லான் ஸ்ரிலெட்ஸ் ஆகியோரே தமது பதவிகளை துறந்துள்ளனர்.

பதவி விலகிய ஒலெக்சாண்ட்ர் கமிஷின் ரஷ்யாவுக்கு எதிரான போரில் முக்கிய பங்கு வகித்தவர். உக்ரைனின் ஆயுத உற்பத்தியை அதிகரித்ததில் இவரின் பங்கு அளப்பரியது.



இதனிடையே, பதவி விலகிய 4 அமைச்சர்களுக்கு பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதேநேரம், அமைச்சரவையும் மாற்றப்படும் என்று ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். ரஷ்யாவுக்கு எதிராக சண்டை நடைபெற்று வரும் நிலையில் அமைச்சர்களின் பதவி விலகல் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. (ஐ)

# போர் நிறுத்தத்தை மீறி காஸாமீது தாக்குதல்கள்!

போலியோ மருந்து வழங்கல் பாதிப்பு

காஸா, செப். 05

போர் நிறுத்தத்தை மீறி காஸா மீது இஸ்ரேல் தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதலால் போலியோ சொட்டு மருந்து வழங்கும் நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது.

காஸாவில் போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்காக ஐ. நாவின் தலையீட்டுடன் மூன்று நாள் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதற்கு இஸ்ரேலும் ஒப்புதல் அளித்தது.

இந்த நிலையில், காஸா மத்திய பகுதியில் போலியோ சொட்டு மருந்து வழங்கும் நடவடிக்கை நடைபெற்றது. இதேசமயம், காஸாவின் தெற்கு பகுதியில் இஸ்ரேல் தீவிர தாக்குதல்களை தொடர்கிறது. இதனால், போலியோ சொட்டு மருந்து வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.



போலியோ மருந்து வழங்கும் முகாம்கள் நடக்கும் பகுதியில் தாக்குதல் நடத்தப்படவில்லை என்றாலும் மற்ற பகுதிகளில் நடத்தப்படும் தொடர் தாக்குதலால் மருந்து வழங்கும் முகாம்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியது. இதில், 1156 பேர் உயிரிழந்தனர். 254 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டிருந்தனர். இதைத் தொடர்ந்து காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 41 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் கார் விபத்து 4 இந்தியர்கள் எரிந்து மரணம்!

நியூயோர்க், செப். 05

அமெரிக்காவில் 5 வாகனங்கள் மோதிய விபத்தில் ஒரு பெண் உட்பட 4 இளம் இந்தியர்கள் உடல் கருகி உயிரிழந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் அன்று அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த தர்ஷினி வாசுதேவன் உட்பட நால்வர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்திலிருந்து அர்கான்சாசில் உள்ள பெண்டான்வில்லி நோக்கி காரில் பயணித்தபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. காரின் பின்புறமாக வந்த கனரக வாகனம் மோதியது. தொடர்ந்து, அந்தக் கார் 4 கார்களை மோதியது.

இதில், கனரக வாகனம் மோதிய கார் தீப்பற்றியதில் அதில் பயணித்த 4 இந்தியர்களும் தீயில் எரிந்து உயிரிழந்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தல் விதிமுறைகளை மீறிய மூவர் புதுக்குடியிருப்பில் கைது!

## மக்களை ஏமாற்றினர் என்ற குற்றச்சாட்டில்

முல்லைத்தீவு, செப். 04

முல்லைத்தீவு பகுதியில் தேர்தல் விதிமுறைகளை மீறிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கைவேலிப் பகுதியில் தேர்தல் விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் மூவரை பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறி மக்களை ஓர் இடத்தில் ஒன்றுதிரட்டி காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குவதாகவும், வேலை வாய்ப்புகள் பெற்றுக்கொடுப்பதாகவும் வாக்குறுதிகளைக் கூறி மக்களிடம் 200 ரூபா பெறப்பட்டு, கட்சி ஒன்றைச் சேர்ந்தவர்களால் படிவம் பூரணப்படுத்தப்பட்டு வந்திருந்தது. அதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகத்தினை சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் அவர்களிடம் இருந்த படிவங்களை பறிமுதல் செய்ததுடன், மூவரை கைது செய்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பொதுநலவாய கண்காணிப்பு குழு 15ஆம் திகதி நாட்டுக்கு வரவுள்ளது

கொழும்பு, செப். 05


ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக் குழு எதிர்வரும் 15 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது.

இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக சீஷேல்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டெனி போர் தலைமையிலான 13 பேர் அடங்கிய பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக்குழு எதிர்வரும் 15 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் கண்காணிப்புப்பணிகளை முன்னெடுப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகள் ஆகியவற்றுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளது.

அதற்கமைய ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் இரண்டு குழுக்கள் கடந்த இரு வாரங்களில் நாட்டை வந்தடைந்ததுடன், அவை நாடளாவிய ரீதியில் தேர்தல் கண்காணிப்புப்பணிகளை ஆரம்பித்துள்ளன.

இந்த நிலையில், பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக்குழுவொன்றும் எதிர்வரும் 15 ஆம் திகதி நாட்டுக்கு வருகை தரவுள்ளது. (அ)



# வவுனியாவில் நேற்று தபால்மூல வாக்களிப்பு

வவுனியா, செப். 05

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமாகின.

வவுனியா மாவட்டத்திலும் வாக்களிப்புச் செயற்பாடுகள் சுமூகமாக ஆரம்பமாகி நடைபெற்றன. வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது தபால் வாக்குகளை அளித்தனர்.

இதேவேளை, நேற்று மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள்,பாதுகாப்பு தரப்பு ஆகியோர் தமது தபால் மூல வாக்குகளை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (அ)

# இறைவரி திணைக்கள அதிகாரிகளாக நடித்து வரி சேகரித்த கும்பல் சிக்கியது!

கொழும்பு, செப். 05

உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகளாக நடித்து, பல்வேறு பிரதேசங்களிலும் சுற்றித்திரிந்து மக்களிடம் பணம் சேகரித்து வந்த சிலரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தநிலையில், குறித்த மோசடி நபர்களால் பாதிக்கப்பட்டவர்கள் இது குறித்து உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# சைவ ஆன்மீகப் பிரசாரகர்களுக்கான அடிப்படைத் தகைமைச் சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம், செப். 05

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட சைவ ஆன்மீகப் பிரசாரகர் அடிப்படைக் கற்கைநெறியை மேற்கொண்டு தகைமை பெற்றோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கள்கிழமை இரவு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தகைமை பெற்றோருக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

இக்கற்கை நெறி ஆறு மாத காலப் பகுதியை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை தொடக்கம் மாலை வரை முழுநாள் கற்கையாக மதிய உணவு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.

திணைக்கள பணிப்பாளரின் மேற்பார்வையில் ச.லலீசன், கு. பாலசண்முகன், ரமணராஜா, கலாநிதி தி. செல்வமனோகரன், கலாநிதி ஜெயந்திரன், பிரம்மஸ்ரீ தி. மயூரகிரி சிவாச்சாரியார் ஆகியோர் கற்கை நெறி வளவாளர்களாகச் செயற்பட்டனர். இருபத்தைவருடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கற்கை நெறியின் இறுதித் தேர்வின் அடிப்படையில் பதினொரு பேர் சித்தியெய்தித் தகைமைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர். இவர்கள் பாடசாலை ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சித்தியெய்தியோர் விபரம் வருமாறு: -

மதிலோஜினி லோகீசன், சு. தாரங்கன், தமிழ்ச்செல்வி மதியழகன், நித்தியானந்தம் பிரபாகர், சந்திரகுமார் மதுராஜினி, ஏ. சிவகுமார், சு. உதயகுமாரி, செல்லத்தம்பி சுரேந்திரா, சிவானந்தராஜா அபிஷனா, ஜே. நிருஷிகா, க. குமாரிமஞ்சுளா.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கற்கை நெறி வளவாளர்களுடன் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள், சைவப் புலவர் கந்த சத்தியதாசன், ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் எம் எஸ் ஸ்ரீதயாளன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)



# சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு மடிக்கணினிகள்

முல்லைத்தீவு, செப். 05

முல்லைத்தீவில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கான மடிக் கணினிகளை, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் நேற்று முன்தினம் வழங்கினார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் பங்களிப்பில், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவுக்கு, மடிக்கணினிகள் வழங்கப்பட்ட நிலையில், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு, இந்த மடிக்கணினி வழங்கப்பட்டது.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் தரவுகளை சேகரித்தல், ஆய்வுக்கு உட்படுத்தல் முதலான செயற்பாடுகளை சிறந்த முறையில் மேற்கொள்ளும் பொருட்டு, மடிக்கணினி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் முயற்சியாண்மை பயிற்சி உத்தியோகத்தர் திருமதி உ. தேவமலர் இணைந்து கொண்டார். (அ)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது!

கிளிநொச்சி, செப். 05

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரசிய தகவலுக்கு அமைவாக குளக்கரை ஒன்றில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரே கைது செய்யப்பட்டார்.

அத்துடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் 2 ஆயிரத்து 613 லிற்றர் கோடா மற்றும் 24 லீற்றர் கசிப்பும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (அ)

# டெங்கு அபாய வலயமாக 29 பிரிவுகள் அடையாளம்

கொழும்பு, செப். 05

நாடளாவிய ரீதியில் சுகாதார வைத்திய அதிகாரிகளின் 29 பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன என சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டிசெம்பர் மாதத்திற்குள் நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என அச்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த வருடத்தில் நாட்டில் 36 ஆயிரத்து 642 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், 17 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகு கவிழ்ந்து...

பகீரதன் (வயது 21) என்பவரே காணா மல் போயுள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

நேற்று புதன்கிழமை அதிகாலை இருவரும் மீன் பிடிப்பதற்காக தமது படகில் கடலுக்கு சென்றுள்ளனர். இந்த நிலையில், திடீரென விபத்துக்குள் ளாகி படகு கவிழ்ந்துள்ளது. இதில், இருவரும் கடலில் வீழ்ந்தனர். ஒருவர் நீந்திக் கொண்டிருந்த நிலையில் சக மீனவர்க ளால் காப்பாற்றப்பட்டார். மற்றையவர் காணாமல் போயுள்ளார்.

காணாமல் போனவரை தேடும் நட வடிக்கையில் மீனவர்களும் கடற்படை யினரும் ஈடுபட்டனர். எனினும், நேற்று மாலை வரை காணாமல் போனவர் மீட்கப்படவில்லை. (ஐ)

## சஜித்தின்...

போதல்களை தராமல் விடுத்து இனம் சார்ந்து செயல்பட்டனர் என்று அந்தக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதேநேரம், அவர்களின் குற்றச் சாட்டை காணொலியாக்கிய செய்தியா ளர்களை சிலர் தடுத்தனர். அத்துடன், கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெளி யான செய்தி ஒன்று தொடர்பில் அதை ஏன் பிரசுரித்தீர்கள் என்றும் கேள்வி எழுப்பி முரண்பட்டனர்.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட பிரதான அமைப்பா ளர் திருமதி ரசிக்காவின் தலையீட்டை தொடர்ந்து நிலைமை சுமுகமானது.

செய்தியாளர்களுடன் முரண்பட்ட வர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உடையை அணிந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கிளி...

கைதானவர்களிடம் இருந்து 3.23 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டதாகவும் மூவரும் தமது ஆசனவாயில் போதைப் பொருளை மறைத்து கடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பொதுவேட்பாளர்...

அங்கு அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

கடந்த காலங்களில் ஏற்பட்ட ஏமாற் றங்களின் விளைவாகவும் நாங்கள் தொடர்ந்தும் ஏமாறுவதற்கு தயார் இல்லை என்பதை காட்டுவதற்கான ஒரு களமாக இந்தத் தேர்தலை பயன்படுத்த வேண்டிய ஒரு நிலைப்பாடு மக்கள் மத்தியில் இருக்கிறது.

இதன் காரணமாக இந்தத் தேர்தலில் என்னை களம் இறக்கியுள்ளனர். வடக்கு - கிழக்கில் இருக்கின்ற மக்கள் அதிகூடிய வாக்குகளை அளிக்க வேண்டும். கடந்த காலங்களில் நாங்கள் ஏமாற்றப்பட்டுள் ளோம் என்பதைக் காட்டுகின்றபோது நாங்கள் போராடிய ஓர் இனம். தொடர்ச் சியாக சுதந்திரமற்று இருக்கின்றோம். எமக்கு தீர்வு அவசியம்.

ஓர் அடையாளத்துக்காகவே நான் சங்கு சின்னத்தில் போட்டியிடுகிறேன். நீங்கள் சங்கு சின்னத்துக்கு வழங்கும் வாக்கு உங்க ளுக்கானது. தமிழன் தமிழனாக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் வடக்கு - கிழக் கில் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்.

சிதறிக்கிடக்கும் தமிழ்த் தேசியக் கட்சி களை ஒன்றிணைத்து ஒரு குடை யின் கீழ் கொண்டு வரும் நோக்காக இதனை அனைவரும் பார்க்க வேண்டும். யாரோ ஒருவர் ஜனாதிபதியாக வெற்றி பெறுவார். யாராகவும் இருக்கலாம். இந்த நாட்டின் 9ஆவது ஜனாதிபதியாக வருகிறவருக்கு ஒரு பாடமாக இது அமைய வேண்டும் - என்றும் கூறினார்.

## மிருசுவில் படுகாலையாளிக்கு மன்னிப்பு:

# கோட்டாவுக்கு எதிரான மனுக்கள் 2025 ஜனவரி 15இல் பரிசீலனை!

கொழும்பு, செப். 05

மிருசுவில் படுகொலையாளி சுனில் ரத்நாயக்கவுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கியமைக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் மனுக்களை எதிர்வரும் 2025 ஜனவரி 15ஆம் திகதி வரை பரிசீலனைக்கு எடுப்பதாக உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2000ஆம் ஆண்டு டிசெம்பரில் யாழ்ப்பாணம் - மிருசுவிலில் 8 வயது சிறுவன் உட்பட எண்மர் இராணு வத்தினரால் படுகொலை செய்யப்பட் டனர். இதில், குற்றவாளியாக அடை யாளம் காணப்பட்ட இராணுவ சார் ஜன்ட் தர அதிகாரியான சுனில் ரத்நாய க்கவுக்கு உயர் நீதிமன்றம் மரண தண் டனை விதித்தது. கடந்த 2015 ஜூன் 15ஆம் திகதி இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்ற கோட் டாபய ராஜபக்ஷ கடந்த 2020 மார்ச் 26ஆம் திகதி அவரை பொது மன்னிப் பில் விடுதலை செய்தார்.

இந்தப் பொது மன்னிப்பை செல்லு படியற்றதாக அறிவிக்குமாறு கோரி மிருசுவில் படுகொலையில் உயிரிழந்த வர்களின் குடும்பத்தினர், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலங்கை மனித உரிமைகள் பேரவை யின் முன்னாள் ஆணையாளர் நாயகம் அம்பிகா சற்குணநாதன் ஆகியோர் அடிப்படை உரிமை மீறல் வழக்குகளை தாக்கல் செய்தனர்.

இந்த நிலையிலேயே மனுக்களின் பிரதிவாதிகள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய நீதிமன்றம் அவகாசம் அளித்து வழக்கை 2025 ஜனவரி 15ஆம் திகதி பரிசீலனைக்காக ஒத்தி வைத்துள் ளது. (ஐ)

## என் உயிருக்கு...

விக்கிரமசிங்கவே பொறுப்புக் கூற வேண்டும் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹ்மான் எம். பி. தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை விசேட கூற்றொன்றை முன் வைத்து குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவும் அஸ்லம் என்ற நபரும் வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்று, 5 வருடங்களாக குற்றச் செயல் ஒன்று தொடர்பில் சந்தேக நபராக இருக்கும் ஒருவரை சந்தித்துள்ளனர். குறித்த சந்தேக நபரிடம், அவரை பிணையில் வெளியில் எடுப்பதாகவும் இன்னும் பல்வேறு சலுகைகளை வழங்குவதா கவும் தெரிவித்து எனக்கு எதிராக வாக்குமூலம் ஒன்றை வழங்குமாறு கேட்டுள்ளார்கள்.

அதாவது, சந்தேகத்தின் பேரில் 5 வருடங்கள் சிறையில் இருக்கும் குறித்த நபரின் குற்றச்செயலுக்கும் எனக்கும் தொடர்பிருப்பதாகத் தெரிவித்தே இந்த வாக்குமூலத்தை அவர்கள் கேட்டுள்ள னர். மனுஷ நாணயக்கார குறித்த சந்தேக நபரை சந்தித்தமை தொடர்பில் என்னி டம் ஆதாரம் இருக்கிறது.

சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காகக் கடந்த காலங்களில் நான் முன்னிலையில் இருந்து செயல்பட்டு வருபவன் என்பது யாரும் அறிந்த விடயம். இதனை தாங் கிக்கொள்ள முடியாமல், என்னை எப்படியாவது ஏதாவது ஒரு பிரச்னைக் குள் சிக்கவைத்து, சிறையில் அடைப்ப தற்கு அல்லது எனது உயிருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு சதித்திட்டம் இடம் பெற்று வருகின்றமை எனக்கு புலனா கிறது.

இந்த விடயங்கள் தொடர்பில் போதுமான ஆதாரங்களை வைத்துக் கொண்டே இதனை தெரிவிக்கிறேன். இது தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்து, இந்த ஆதாரங்களை சமர்ப்பிக்க இருக்கிறேன். எனது உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அதற்கு ரணில் விக்கிரம சிங்க பொறுப்பு கூறவேண்டும் என்பதை நான் பகிரங்கமாகத் தெரிவிக்கிறேன். ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒருவரை 15 வருடங்களாக அவரை இந்த நாட்டின் தலைவராக்க ஐக்கிய தேசிய கட்சிக்கு எமது வாழ்க்கையை அர்ப்ப ணித்து பணியாற்றியமைக்காக நான் வெட்கப்படுகிறேன்.

எனக்கு எதிராக மேற்கொள்ளப்பட் டுவரும் சதித்திட்டம் தொடர்பில் நீதி கிடைக்க வேண்டும். குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸார் இது தொடர்பில் தேடிப்பார்க்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனது பாது காப்பை உறுதிப்படுத்துமாறு சபாநாய கரை கேட்டுக்கொள்கிறேன் -என்றார்.

## நாடு முழுவதும்...

நடைபெற்றது.

இந்த நிலையில், இன்றும் நாளையும் அஞ்சல் மூல வாக்களிப்பு நடைபெறவுள் ளது.

இந்த நாட்களில் வாக்களிக்க முடியா தவர்கள் எதிர்வரும் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும்.

இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு, 7 இலட்சத்து 12 ஆயிரத்து 321 அரச உத்தி யோகத்தர்கள் தகுதி பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ் அரசு...

மத்திய குழு உறுப்பினர் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக பகிரங்கமாக மேடையேறியுள்ளார் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இதேபோன்று, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான அருண் தம்பிமுத்து தனிப்பட்ட ரீதியில் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதாகக் கூறியிருந்தார். கட்சியின் முடிவை விரை வில் அறிவிப்பதாகத் தெரிவித்த அவர் தற்போது தமிழ்ப் பொது வேட்பாள ருக்கு ஆதரவான பிரசாரத்தில் ஈடுபட் டுள்ளார். எனினும், அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்தசங்கரி பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## அரச...

பணிப்பாளர் ரோஹண ஹெட்டி யாரச்சி தெரிவித்தார்.

தீர்மானங்களை எடுப்பதற்கு அமைச் சரவைக்கு உள்ள அதிகாரம் குறித்து நான் முரண்படவில்லை. எனி னும் இந்த மூன்று தீர்மானங்களும் தேர் தலில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் இவை பார தூரமானவை என அவர் தெரிவித்தார்.

இந்த வார அமைச்சரவைக் கூட்டத் தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளங் களை அதிகரிப்பதற்கும், வரிகளை குறைப்பதற்கும் உள்ளூராட்சிச் சபை தேர்தலுக்கான வேட்பு மனுக்களை இரத்துச் செய்வதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், தபால்மூல வாக்களிப்புக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் வெளியான இந்த அறிவிப்பு 14 மில்லியன் அரசாங்க ஊழி யர்களை கவர்வதற்கான முயற்சி என குறிப்பிட்டார்.

சில மாதங்களுக்கு முன்னரே அரசாங் கம் ஒரு சதம் கூட சம்பளத்தை அதிக ரிக்க முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் மூலம் தெரிவித்திருந்தது என அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## தமிழரின்...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன்.

நேற்று மட்டக்களப்பில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக நடத் தப்பட்ட பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தந்தை செல்வா தலைமையில் அகிம்சை ரீதியில் நாங்கள் போரடி னோம். ஆனால், அகிம்சை போராட் டத்துக்கு உரிய மரியாதை, மதிப்புக் கொடுக்கப்படவில்லை. அவர் சிங்கள தலைவர்களால் ஏமாற்றப்பட்டார். தந்தை செல்வா இரத்தம் சிந்தாமல் சுதந் திரத்தைப் பெற்றுக்கொடுக்க விரும்பி னார். ஆனால், அவர் ஏமாற்றப்பட்டார்.

அதன்பின்னர், வந்த சந்ததிகள் அகிம்சை என்ற பாஷை பலிக்காது என்பதை உணர்ந்து கொண்டனர். இந்த அடிப்படையில்தான் ஆயுதப் போராட் டம் 30 ஆண்டுகள் நடைபெற்றது. 30 வருடங்கள் நடைபெற்ற ஆயுதப் போராட்டம் ஒழுக்கமான ரீதியில் நடைபெற்றது. ஆனால், அந்தப் போராட்டம் 22 நாடுகளின் உதவியுடன் மௌனிக்கப்பட்டது.

அதன் பின்னர், 15 ஆண்டுகள் பேச்சு மூலம் ஒரு தீர்வைப் பெற வேண்டும் என இராஜதந்திரத்துடன் உழைத்துப் பார்த் தோம். எந்தப் பலனும் கிடைக்க வில்லை. அகிம்சை போராட்டம் வெற்றி யளிக்கவில்லை. ஆயுதப் போராட்டம் எங்களுக்கு பலனைத் தரவில்லை. இராஜதந்திர ரீதியான பேச்சுக்கூட வெற்றியளிக்கவில்லை. எனவே, போராட்டத்தின் வழியை மாற்ற வேண்டும். இதுவரை நாங்கள் சிங்களத் தலைவர்களுக்கு வாக்களித்து வந்திருக்கின்றோம். அதனால், ஏமாற் றங்களையும் சந்தித்து வந்திருக்கின் றோம். 8 ஜனாதிபதிகளுக்கு வாக்களித்து ஏமாற்றங்களை சந்தித்தன் பிரதிபலிப் பாக ஒரு மாற்று வழியைத் தேடினார் கள். 82 சிவில் கட்டமைப்பினர் ஒன்றி ணைந்து ஒரு பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டும் என முடிவெடுத் தார்கள். அதன் காரணமாகத்தான் அரியநேத்திரன் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

பொதுவேட்பாளர் ஒரு முட்டாள் தனமான வேலை - பொதுவேட்பாளரை படுதோல்வியடைய செய்ய வேண்டும் என ஒருவர் கொக்கரிதார். அந்தக் கொக் கரிப்புத்தான் எனக்கு ஓர் உறுத்தலைத் தந்தது. மக்கள் பொது வேட்பாளரை வெற்றியடையச் செய்ய தீர்மானித்துள் ளார்கள். யுத்தம் நிறைவடைந்த பின்னர் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தி யுள்ளோம். இந்த பொதுவேட்பாளர் விடயத்தை ஆதரிப்பது யார்? எதிர்ப்பது யார் என்பதை அறிவதற்கு ஒரு சந்தர்ப் பம் கிட்டியுள்ளது.

அகிம்சை போராட்டம், ஆயுதப் போராட்டம் என்பன தோல்வியைத் தந்ததால்தான், பொதுவேட்பாளர் என்ற ஜனநாயக போராட்டத்தை ஆரம்பித்தி ருக்கின்றோம். பொதுவேட்பாளருக்கு அளிக்கப்படும் வாக்குகள், நாங்கள் இன்னமும் ஜனநாயகத்தின் நம்பிக்கை வைத்து ஒரு கௌரவமான தீர்வை நோக்கிச் செல்கின்றோம். அந்த கௌர வமான தீர்வை உள்நாட்டுப் பொறி முறை மூலமாக 75 வருடங்களாக இலங் கையில் இருக்கும் தலைவர்களால் தீர்த்து வைக்க முடியாமல் இருக்கின்ற னர்.

நாங்கள் கேட்கின்றோம் சர்வதேச ரீதியாக ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும். தொடர்ந்தும் ஏமாற்றங்களை தந்து கொண்டிருக்கும் போது, சர்வதேசத்தின் கண்களை விழிக்கச் செய்ய வேண்டும் - சிந்திக்கச் செய்ய வேண்டும். சர்வதேச ரீதியாக 15 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இருக்கின்றனர். இப்போது அவர் கள் எங்களுக்காக இணைந்து குரல் கொடுக்கத் தொடங்கின்றனர். சர்வ தேச ரீதியில் நாங்கள் ஒரு தீர்வைப் பெற் றுக்கொள்வதற்கான பரீட்சார்த்த வாய்ப்பாக தமிழர் தாயகத்தில் எமது மக்கள் 50 சதவீத வாக்கைப் பெற்றுக் கொடுத்து 1977, 2004 ஆம் ஆண்டுகளில் வெளிப்படுத்தியது போன்ற மக்கள் தீர்ப்பை அளிக்க வேண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதி தேர்தலில் தலையிடமாட்டோம்!

## ரஷ்யத் தூதுவர் அறிவிப்பு

கொழும்பு, செப். 05

**இலங்கை ஜனாதிபதி தேர்தலை நெருங்கிக்கொண்டிருக்கின்ற தருணத்தில் ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற ரஷ்யாவின் நிலைப்பாட்டை இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். ட்ஜகார்யன் வலியுறுத்தியுள்ளார்.**

நாங்கள் நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை. நாங்கள் உங்களுக்கு விரிவுரை செய்வதில்லை. இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார் என தீர்மானிப்பது உங்கள் மக்களை பொறுத்த விடயம் என ரஷ்ய தூதுவர் குறிப்பிட்டார்.

நாங்கள் உங்கள் தெரிவை மதிப்போம். நீங்கள் தெரிவு செய்யும் எந்த ஜனாதிபதியுடனும் இணைந்து பணியாற்றுவோம் என அவர் கூறினார்.

இலங்கையில் அமைதியான தேர்தல் நடைபெறுவதற்கான தனது வாழ்த்துக்களை தெரிவித்த ரஷ்ய தூதுவர், புதிய ஜனாதிபதியும் நடுநிலைமை கொள்கைகளைப் பின்பற்றுவார். ரஷ்யாவுடன் நட்புறவை பேணுவார் என நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# சுயாதீனமாக செயல்படுவதற்கு அருந்திக பெர்ணான்டோ முடிவு

கொழும்பு, செப். 05

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சுயாதீனமாக செயற்படப் போவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நான் இங்கே கவலையுடன் உரையாற்றுகின்றேன். அடுத்த பாராளுமன்றம் கூடும்போது, புதிய ஜனாதிபதி பெறுப்பேற்றிருப்பார்.

நாட்டின் ஜனநாயகத்தை சீர்குலைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

யாரேனும் நாட்டை முன்னேற்றுவதற்கு முயற்சித்தால் அவரை வீழ்த்துவதற்கு இடமளிக்க முடியாது.

தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவாக புத்தளத்தில் பாரிய கூட்டமொன்றை நடத்தினோம்.

யுத்தத்திலிருந்து நாட்டை மீட்ட மகிந்த ராஜபக்ஷ மீது மரியாதை வைத்துள்ளதைப் போல பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களைக் காப்பாற்றிய ரணில் விக்கிரமசிங்க மீது கௌரவம் உண்டு. ஆயினும், ஆட்சியை கைப்பற்றுவதற்காக மறைமுகமான குழு இயங்குவதாக சந்தேகம் எழுந்துள்ளது. நாட்டை நேசிக்கும் நபர் என்ற அடிப்படையில் நான் சுயாதீனமாக இயங்குவதற்கு தீர்மானித்துள்ளேன் - என்றார். (அ)

# கடந்த 8 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ரூ.13 கோடி அபராதம்!

கொழும்பு, செப். 05

நாடளாவிய ரீதியில் கடந்த 8 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது நுகர்வோர் விவகார அதிகார சபையினால் 13 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 16 ஆயிரத்து 530 சோதனைகள் முன்னெடுக்கப்பட் டுள்ள நிலையில், 13 கோடியே 61 இலட்சத்து 59 ஆயிரத்து 999 ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் பாண் தொடர்பாக ஆயிரத்து 557 சோதனைகளும், அரிசி தொடர்பாக 2 ஆயிரத்து 382 சோதனைகளும் முன்னெடுக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# கடவுச்சீட்டு பிரச்னைக்கு ஒரு மாதத்துக்குள் தீர்வு!

கொழும்பு, செப். 05

கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ளவதில் உள்ள பிரச்னைகளை ஒரு மாத காலத்திற்கள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்தார்.

கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றமை தொடர்பில் கவலையடைவதாகவும் இந்த பிரச்னையை ஒரு மாத காலத்திற்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப்ஹகீம் ஆகியோர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை வழங்க அமைச்சின் ஊடாக முதலில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆயினும் தொழில்நுட்ப பிரச்னை காரணமாக அதில் தாமதம் ஏற்பட்டது.

சாதாரண கடவுச்சீட்டுகள் கையிருப்பில் இல்லாததால் வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

அது தொடர்பில் நாம் கவலையடைகிறோம்.

குடிவரவு - குடியகல்வு திணைக்களம் இது தொடர்பில் உரிய கணக்கெடுப்பை மேற்கொண்டிருக்க வேண்டும்.

சுமார் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் கடவுச்சீட்டுகளை அச்சிட்டு இந்தப் பிரச்னையை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் அவற்றை அச்சிடுவதற்கான காலம் தேவைப்படுகிறது. ஆதலால் சுமார் ஒருமாத காலத்துக்குள் கடவுச்சீட்டு பிரச்னையை முகாமைத்துவம் செய்வதற்கான அறிவுறுத்தல்கள் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளன - என்றார். (அ)

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைதான 2 பேர் விளக்கமறியலில்

கிளிநொச்சி, செப். 05

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று முற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது இலஞ்சம் வழங்கியதாக குறிப்பிடப்படும் 60 ஆயிரம் ரூபா பணம் சான்றுப் பொருளாக மன்றில் ஒப்படைக்கப்பட்டது.

கிளிநொச்சி, உருத்திரபுரம் சிவநகர் பகுதியில் அனுமதி பெறாமல் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டமை தொடர்பில் அதிகாரிகள் இருவர் மூன்று இலட்சத்து அறுபதாயிரம் ரூபாய் லஞ்சம் கோரியதுடன் இதில் முதற்கட்டமாக குறித்த கட்டட உரிமையாளரால் 60,000 ரூபா இலஞ்சமாக வழங்கப்பட்டபோது இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் அவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வட்டுக்கோட்டை விபத்து; முதியவர் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 05

வட்டுக்கோட்டையில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை சந்திக்கு அருகில் நேற்று காலை இடம்பெற்ற விபத்திலேயே முதியவர் காயமடைந்தார்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று, வலது பக்கமாக திரும்ப முற்பட்ட வேளை அதே திசையில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிளின் சாரதியும், அவருக்கு பின்னால் அமர்ந்திருந்து தலைக்கவசம் இன்றி பயணித்த முதியவரும் காயமடைந்தனர். முதியவர் சம்பவ இடத்தில் மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மூன்றில் ஒரு பகுதி சிறுவருக்கு பூரண போசணைக் குறைபாடு!

கொழும்பு, செப். 05

நாட்டில் உள்ள சிறுவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பூரண போசணைக் குறைபாட்டுக்கான அறிகுறிகளுடன் உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி கவிரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

யுனிசெப் வெளியிட்ட அறிக்கையொன்றை பாராளுமன்றில் முன்வைத்து உரையாற்றும்போது இதனைத் தெரிவித்த அவர், நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பெருந்தோட்ட பகுதிகளிலேயே அதிகளவான சிறுவர்கள் தீவிர போசணைக் குறைபாடுகளைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த நிலைமை நீடித்தால் நாட்டில் மந்த போசணை நிறைந்த சமூகமே எஞ்சும் எனக் குறிப்பிட்ட அவர், இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் மந்த போசணை நிலைமையினை இல்லாதொழிப்பதற்கு அத்தியாவசிய பொருட்களின் விலையினை கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

இந்த நிலைமையை நிவர்த்தி செய்வதற்காகக் குறுங்கால மற்றும் நீண்டகால தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சிறுவர்களுக்குச் சிறந்த போசணை உணவுகள் வழங்கப்பட வேண்டும் என்பது அதில் குறுங்கால தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே அந்தத் தீர்வினை பெற்றுக்கொடுக்க அரசாங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி கவிரத்ன கோரியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, தற்போது 17 இலட்சம் ஆரம்பப்பிரிவு பாடசாலை மாணவர்களுக்குப் பகலுணவு வழங்கப்படுவதாகத் தெரிவித்தார். (அ)

# சில அத்தியாவசியப் பொருட்களுக்கு உச்ச கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்!

கொழும்பு, செப். 05

சில அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உச்ச கட்டுப்பாட்டு விலைகளை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 162 முதல் 184 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி 235 முதல் 264 ரூபா வரையிலும், ஒரு கிலோகிராம் பருப்பு 270 முதல் 303 ரூபா வரையிலும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராம் 180 முதல் 232 ரூபாய் வரையிலும், 400 கிராம் பால்மாவின் விலை 910 முதல் 1050 ரூபாய் வரையிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org